நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள்.10 .06.2021.

அவசரக்கூட்டம்

அன்புடையீர்,

2021ம் வருடம் ஜீன் மாதம் 10.06.2021ந் தேதி வியாழக் கிழமை அவசரக்கூட்டம் காலை11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலித்து முடிவு செய்ய இருக்கிறது.

தனி அலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.

பொருள்கள்

1. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021-ன்கீழ் சாலை பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20557/2020/இ3, நாள்.15.12.2020ம் தேதியிட்ட கடிதத்தில் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கியதன்பேரில் மேற்படி பணிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூகோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட மானிய நிதி (ரூ கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ கோடியில்) |
|---|---|---|---|
| ஆத்தூர் நகராட்சி | 5.00 | 4.50 | 0.50 |

மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைபொறியாளர் , சென்னை அவர்களின் கடித ந.க.எண்.23655/2020/DO1, நாள்.22.12.2020ம் தேதியிட்ட கடிதத்தில் இப்பணிக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கியதன்பேரில் கீழ் கண்ட பகுதிகளில் சாலை பணிகள் மேற்கொள்ள 25.01.2021ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரு சிப்பங்களுக்கும் தலா இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | அகலம் (மீட்டர்) | மதிப்பீட்டுத் தொகை ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | சிப்பம் – I | | | |
| | ஆத்தூர் நகராட்சிக்குட்பட்டவார்டு எண்.19 பாரதியார் தெரு, வார்டு எண்.18 காதர் பேட்டை, வார்டு எண்.18 மற்றும் 30 காக்காபாளையம் மற்றும் பெரியார் தெரு வார்டு எண்29 மற்றும் 32, பைத்தூர் ரோடு முதல் அம்பேத்கார் நகர் ரோடு மற்றும் குறுக்கு தெருக்களுக்கு தார்சாலை, சிமெண்ட் சாலை, மழை நீர் வடிகால் மற்றும் பாலங்கள் அமைத்தல் பணி. | 2.75 | 4.00 முதல் 5.00 | 250.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | சிப்பம் – II | | | |
| | ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2, உப்பு ஓடை, வார்டு எண் 32 அம்பேத்கர் நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருக்கள் , வார்டு எண் 31 வ.ஊ.சி குறுக்கு தெருக்கள் வார்டு எண் 15 மற்றும் 16 புதுப்பேட்டை மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருக்கள், வார்டு எண் 1, 6 மற்றும் 7ல் முல்லைவாடி மற்றும் கோட்டைமெயின் மற்றும் குறுக்கு தெருக்கள், வார்டு எண் 17,24 மற்றும் 19அமீர் தெரு, காந்தி நகர், பழையபேட்டை மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் தார் சாலை, சிமெண்ட் சாலை, மழை நீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைத்தல் பணி. | 4.25 | 3.50 முதல் 5.00 | 250.00 |
| | மொத்தம் | 7.00 | | 500.00 |

பெறப்பட்ட இரு ஒப்பந்தபுள்ளிகளில் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி தகுதி பெற்றுள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.அபுபக்கர் சித்திக் ஒப்பந்ததாரர் ஆத்தூர் என்பவரின் (Price Bids) ஒப்பந்தப் புள்ளிகளை 0502.2021ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் சிப்பம் எண்1க்கு திரு.எஸ்.அபுபக்கர் சித்திக் ஒப்பந்ததாரர் ஆத்தூர் என்பவர் 4.96% மதீப்பீட்டைவிட அதிகமாகவும் சிப்பம் எண்2க்கு 5.05% மதீப்பீட்டைவிட அதிகமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் கொடுத்துள்ளதை விலை குறைத்து வழங்க கோரி 05.02.2021ல் கடிதத்தின் மூலம் மேற்படி ஒப்பந்ததாரரிடம் கோரப் பட்டதில் மேற்படி ஒப்பந்ததாரர் சிப்பம் எண்1க்கு 4.9% மதீப்பீட்டைவிட அதிகமாகவும் சிப்பம் எண்2க்கு 4.90% மதீப்பீட்டைவிட அதிகமாகவும் பணி செய்ய தனது சம்மத கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி பணிக்கு விலை குறைத்து கொடுத்துள்ளது மதீப்பீட்டைவிட அதிகமாக உள்ளதால் மீண்டும் விலை குறைத்து வழங்க கோரி 09.02.201ல் கடிதத்தின் மூலம் மேற்படி ஒப்பந்ததாரரிடம் கோரப்பட்டதில் மேற்படி ஒப்பந்ததாரர் விலை குறைத்து கொடுக்க முன்வரவில்லை இந்நிலையில் தற்போது மேற்படி ஒப்பந்ததாரர் திரு.எஸ்.அபுபக்கர் சித்திக் கொரோனாநோய் தொற்று காரணமாக 28.05.2021ல் அகலா மரணமடைந்து விட்டார். இதனால் இத்திட்டப்பணியினை தொடர்ந்து நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலையில் உள்ளதால் இப்பணிக்கு ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்தும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் தனிஅலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மேற்படி ஒப்பந்ததாரர் திரு.எஸ்.அபுபக்கர் சித்திக் கொரோனாநோய் தொற்று காரணமாக 28.05.2021ல் அகலா மரணமடைந்து விட்டார். இதனால் இத்திட்டப்பணியினை தொடர்ந்து நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலையில் உள்ளதால் இப்பணிக்கு ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்தும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண் 2884/2020/இ1)

2. ஆத்தூர் நகராட்சி பகுதிகளில் DAY-NULM SCHEME-Special Shelter திட்டத்தின்கீழ் ஆத்தூர் அரசு மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெறும் உள்நோயாளிகளின் உதவியாளர்கள் தங்கும் அறை கட்டுதல் பணிக்கு 6 –thIIPSC கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் கடிதம் ந.க.எண். 38038/2013/UPA2 நாள்.06.03.2020 ரூ.95.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 09.09.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது, பெறப்பட்ட இரு ஒப்பந்தப் புள்ளிகளில் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி தகுதி பெற்றுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஸ்.அபுபக்கர் சித்திக் ஒப்பந்ததாரர் ஆத்தூர் என்பவரின் (Price Bids) ஒப்பந்தப்புள்ளிகளை 12.10.2020ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் திரு.எஸ்.அபுபக்கர் சித்திக் ஒப்பந்ததாரர் ஆத்தூர் என்பவர் 4.98% மதீப்பீட்டைவிட அதிகமாக ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ளதை விலை குறைத்து வழங்க கடிதத்தின் மூலம் கோரப்பட்டதில் மேற்படி ஒப்பந்ததாரர் 0.08% குறைத்து இறுதியாக 4.90% மதீப்பீட்டை விட அதிகமாக பணி செய்ய தனது சம்மத கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அதன்படி மேற்படி பணிக்கு 4.90% மதீப்பீட்டை விட அதிகமாகவும் இறுதியாகவும் கொடுத்துள்ளதை தனிஅலுவலர் தீர்மானம் எண்221, நாள்.02.11.2020ல் ஏற்று அனுமதி வழங்கியதன் பேரில் ஒப்பந்ததாரர் திரு.ஸ்.அபுபக்கர் சித்திக் ஆத்தூர் என்பவருக்கு 05.11.2020ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் பணி ஆரம்பிக்கும் இடத்திற்குசென்றபோது கொரோனா நோய் தொற்று காரணமாக இருந்ததால் மேற்படி பணி ஆரம்பிக்கும் இடத்தில் மருத்துவ துறை அலுவலர்களால் கூடுதலாக ஒரு செட் அமைக்கப்பட்டு கொரோனாவிற்கு பயன்படுத்தட்டு வந்தது. அதனை அகற்றி கொடுக்க கோரிய போது வேறு இடம் மருத்துவமனையின் பின்புறம் வடக்கு கடைசி பகுதியில் இடம் ஒதுக்கப்பட்டது. அங்கேயும் பணி துங்கப்பட்ட போது மீண்டும் மருத்துவதுறை அலுவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது. மேலும் தற்போதுவரை கொரோனா நோய்தொற்று அதிகமாக பரவி வருவதால் மேற்படி வளாகத்தில் பணியை துவங்க இயல வில்லை மேலும் பணிமேற்கொள்ளும் இடம் கொரோனா வார்டு கட்டிடத்தை தாண்டி செல்ல வேண்யுள்ளதால் பணி செய்யும் பணியாளர்கள் எவரும் முன்வரவில்லை.

தற்போது ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் கொரோனாநோய் தொற்று காரணமாக 28.05.2021ல் அகலா மரணமடைந்து விட்டார். எனவே இந்த பணியினை மேற்படி ஒப்பந்ததாரர் மூலம் செய்ய இயலாது, ஆகவே இப்பணிக்கு கொடுத்துள்ள வேலை உத்திரவினை இரத்து செய்தும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் தனிஅலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மேற்படி ஒப்பந்ததாரர் திரு.எஸ்.அபுபக்கர் சித்திக், ஆத்தூர் என்பவர் கொரோனா நோய் தொற்று காரணமாக 28.05.2021ல் அகலா மரணமடைந்து விட்டார். எனவே ஒப்பந்ததாருக்கு கொடுத்துள்ள வேலை உத்திரனை இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண் 4058/2019/இ1)

தனிஅலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.

நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள்.30 .06.2021.

இயல்புக்கூட்டம்

அன்புடையீர்,

2021ம் வருடம் ஜூன் மாதம் 30.6.2021ந் தேதி புதன் கிழமை இயல்புக்கூட்டம் காலை11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலித்து முடிவு செய்ய இருக்கிறது.

தனிஅலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.

பொருள்கள்

1. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN.27. Q-8521ன் பேட்டரி வாங்கி மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் ஈப்பு வாகனத்தின் பேட்டரி பழுது ஏற்பட்டு தொடர்ந்து வாகனத்தை இயக்க முடியாமல் உள்ளதால், தற்சமயம் நகரில் இரண்டாம் அலை கொரோனா நோய் தொற்று தீவிரமடைந்துள்ளதால், பொதுமக்களின் நலன் கருதி அவ்வப்போது கொரோனா கேர் சென்டருக்கு மேற்படி ஈப்பு வாகனம் பயன்படுத்தப்பட்டு வருவதால், விரைந்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் விதி 1920–ன்படி பிரிவு15–ன் கீழ் மேற்படி ஈப்பு வாகனத்திற்கு புதியதாக பேட்டரி வாங்கி பொருத்தியதமைக்கு ஆன தொகை ரூ.8300/–ஐ செலவிடப்பட்டதற்கு தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர் பதிவு செய்யலாம்.
2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொண்டமைக்கு தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1236/2021/இ1)

2. இந்நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகள் (ம) அரசு பள்ளிகளில் உள்ள கழிவறைகள், பள்ளி வளாகங்கள், வகுப்பறைகள் தூய்மை செய்யும் பணிக்கு விழிப்புணர்வு மூலம் (Outsourcing) ஒப்பந்தப்புள்ளிக் காலம் 30.06.2021–ம் தேதியுடன் முடிவடைகிறது. தற்போது 2–ம் அலை கொரோனா நோய் தடுப்பு ஊரடங்கு நடைபெறுவதால் ஒப்பந்தப் புள்ளிகள் கோர இயலாது. எனவே, மேலும் மூன்று மாதகாலத்திற்கு (ஜீலை, ஆகஸ்ட், செப்டம்பர்) மறு உத்தரவு ஊரடங்கு தடைக்காலம் வரும் வரை ஏற்கனவே பெற்றப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் 6 தூய்மை பணியாளர்கள் பணி மேற்கொள்ள பணி நீட்டிப்பு வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. 2–ம் அலை கொரோனா நோய் தடுப்பு ஊரடங்கு நடைபெறுவதால் அவசர அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. செலவினம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.1494/2016/எச்1)

3. ஆத்தூர் நகராட்சி அலுவலகத்திலுள்ள ஆணையர் பிரிவு பொது பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதாரபிரிவு, வருவாய் பிரிவு, நகரமைப்புபிரிவு, கணிணி பிரிவு , தேர்தல் பிரிவு மற்றும் காசாளர் பிரிவு ஆகிய அறைகளிலுள்ள 26 கணிணிகள், மானிட்டர்கள், 20 பிரிண்டர்கள், ஸ்கேனர், ஜெராக்ஸ் பிரிண்டர், கலர்லேசர் பிரிண்டர், CCTV கேமிராக்கள், LED TVஅலுவலகத்தின் கீழ் தளத்திலுள்ள UPS பேட்டரிகள் மற்றும் மேல் தளத்திலுள்ள UPS பேட்டரிகள் ஆகியவற்றினை 01.07.2021 முதல் 30.06.2022 முடிய ஓராண்டில் (A.M.C)அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் மற்றும் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணிக்கு, தனி அலுவலர் தீர்மானம் எண்.79, நாள் 31.05.2021ல் ரூ.2,11,000/–ம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்கு 17.06.2021ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | M/S Spyder Technology, Salem | 0.33% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S Digi Print & Service, salem | 0.52% மதிப்பீட்டைட விட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S Spyder Technology, Salem என்பவரின் 0.33% மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய தனிஅலுவலரின்ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S Spyder Technology, Salem என்பவரின் 0.33% மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை தனி அலுவலர் ஏற்கலாம். பணி மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கவும், தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1496/2021/இ1)

4. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு 1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் வெளிகொணர்வு பணியாளர்களை கொண்டு வீடு வீடாக குப்பைகளை சேகரம் செய்து குறிப்பிட்ட நுண்உரம் செயலாக்கம் தயாரிக்கும் பணியை ஒப்பந்த அடிப்படையில் 100 வெளிகொணர்வு பணியாளர்களை பணியமர்த்தி பணி மேற்கொள்ள நகர மன்ற தீர்மான எண்–601, நாள்–28.09.2018 மற்றும் தீர்மான எண்69, நாள்–31.05.2019ன்படி ஓர் ஆண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் கோரப்பட்டு இவ்வலுவலக ந.க.எண்.3983/2018/எச்1, நாள்–28.09.2018–ன்படி M/s.Relyon Facility Services PVT ltd., Chennai-9 என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், இவ்வுத்திரவின்படி 11.06.2021–உடன் ஓர் ஆண்டு காலம் முடிவடைவதால் 12.06.2021 முதல் மேலும் ஓர் ஆண்டிற்கு பணியை நீட்டிக்க தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

தூய்மை பணியின் அவசர அவசியம் கருதி நுண்உரம் செயலாக்க பணியை மேற்கொள்ளவும், ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 100 வெளி கொணர்வு பணியாளர்கள் மூலம் பணி மேற்கொள்ள உத்தேச செலவின மதிப்பீடு ரூ.186.71 லட்சம் தொகையினை திடக்கழிவு மேலாண்மை சிறப்பு நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம் (ந.க.எண்.3983/2018/எச்1) .

5. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் நடவடிக்கைக்காக நகர பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு வீடுவீடாக சென்று காய்ச்சல் பரிசோதனை செய்ய 150 எண்ணிக்கையில் தெர்மல் ஸ்கேனர் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் பெறப்பட்ட உத்தேச செலவினம் ரூ. 3,11,850/– மட்டும் பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க மன்றத்தின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி விபரம்

1. Sri Kaliyamman Trading Corporation – ரூ. 2,079/No.
2. Sri Athanur Amman Traders – ரூ. 2,152.50/No.

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Sri Kaliyamman Trading Corporation நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தொகையை பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.1546/2021/எச்1).

6. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் நடவடிக்கைக்காக நகர பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு வீடுவீடாக சென்று ஆக்சிஜன் அளவு பரிசோதனை செய்ய பல்ஸ் ஆக்சி மீட்டர் 150 எண்ணிக்கைக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் பெறப்பட்ட உத்தேச செலவினம் ரூ. 2,07,900/– மட்டும் பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க மன்றத்தின் அனுமதிக்கு கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி விபரம்

1. Sri Kaliyamman Trading Corporation – ரூ. 1386/No.
2. Sri Athanur Amman Traders – ரூ. 1627.50/No.

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ~~விலைப்~~ ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ள Sri Kaliyamman Trading Corporation நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தொகையை பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.1547/2021/எச்1).

7. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஆட்டோ வாகன எண்–TN-77 K-6630–ன் என்ற வாகனத்தில் டிசல் பம்ப்பின் (Sensor Board), வாழ்வு பழுதடைந்து விட்டதால் பழுதுகளை சரிசெய்யவும், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணி மனைகளில் ஒப்பந்தப்புள்ளி கோரவும் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. உத்தேச செலவினம் ரூ.13,000—ஐ தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.3088/2020/எச்1).

8. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக வீடு வீடாக சென்று நோய் தொற்றை கண்டறியும் களப்பணியாளர்கள் மற்றும் துப்புவு பணியாளர்களுக்கு மாஸ்க்10,000 எண்ணிக்கையில் தேவைப்படுவதால் மாஸ்க் வழங்குபவர்களிடமிருந்து விலைப்புள்ளி வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 50,000/—க்குள் வாங்கி கொள்ள தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப் படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட மாஸ்க் 10,000 எண்ணிக்கையில் வாங்க ஆகும் செலவினத்தொகை ரூ.50,000/— தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத் தொகையை பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்(ந.க.எண்.1498/2021/எச்1).

9. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக வீடு வீடாக சென்று நோய் தொற்றை கண்டறியும் களப்பணியாளர்கள் மற்றும் துப்புவு பணியாளர்களுக்கு கையுறை 5,000 எண்ணிக்கையில் தேவைப்படுவதால் கையுறை வழங்குபவர்களிடமிருந்து விலைப்புள்ளி வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.60,000/—க்குள் வாங்கி கொள்ள தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட கையுரை 5,000 எண்ணிக்கையில் வாங்க ஆகும் செலவினத்தொகை ரூ.60,000/— தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத் தொகையை பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1498/2021/எச்1).

10. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக களப்பணியாளர்கள் ஒவ்வொரு வீடாக சென்று Oximeter வைத்து ஆய்வு செய்யும் பொழுது பொதுமக்களின் கைகளை சுத்தம் செய்ய களப்பணியாளர்களிடம் கொடுத்து அனுப்ப Sanitizer-150 litre தேவைப்படுவதால் செலவினத் தொகையை அனுமதிக்க தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையின் அவசர அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தொகை நகராட்சி பொது நிதி அல்லது பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்(ந.க.எண்.1498/2021/எச்1).

11. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.31159/2018/டிபி3, நாள்.05.03.2019ல் தெரிவித்துள்ளபடியும், அரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.43, பகுதி–III,1 (a), நாள்.04.02.2019லும் மேற்படி விதிகளின் பிரிவு எண்.30(1) (2)–ல் குறிப்பிட்டுள்ளவாறு ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தொடர் கட்டிடப்பகுதிகள் (Continuous Building Areas), பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி (Economically Weaker Section Areas) மற்றும் வறுமையினர்களுக்கான பகுதி ( Poor class area as per D.D.Plan No.1) ஆகியவற்றை கண்டறிந்து அவற்றின் சர்வே எண்கள் மற்றும் தேவையான விவரங்களை வரைபடத்துடன் தயார் செய்து மன்ற ஒப்புதல் பெற்று நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தயார் செய்யப்பட்ட பட்டியல் தனிஅலுவலரின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்குறிப்பிட்ட தொடர் கட்டிடப்பகுதிகள் (Continuous Building Areas), பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி ((Economically Weaker Section Areas) மற்றும் வறுமையினர்களுக்கான பகுதி ( Poor class area as per D.D.Plan No.1) ஆகியவற்றிற்கான சர்வே எண்கள் மற்றும் விவரங்கள் அடங்கிய பட்டியல் மற்றும் வரைபடத்தினை தனிஅலுவலர் அனுமதிக்கலாம். (ந.க.எண்.774/2019/எப்1)

12. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான குளோரின் செலுத்தப்படும் மோட்டார் வாங்கி 5 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது . மேலும் இந்த மோட்டார் அடிக்கடி பழுது ஏற்படுகிறது மேலும் மேற்படி குளோரின் செலுத்தப்படும் மோட்டார் ஒன்று மட்டுமே உள்ளதால் பழுது ஏற்பட்டு அவற்றினை பழுது நீக்கி பொறுத்தும் வரை குடிநீரில் குளோரினை தகுந்த அளவில் கலந்து குடிநீர் விநியோகம் செய்வது சிரமம் ஏற்படுகிறது மேலும் கொரோனோ , டெங்கு போன்ற கொடிய நோய்கள் பரவுதால் தகுந்த அளவில் குளோரின் கலப்பது மிகவும் அவசியமாகிறது . எனவே பொது மக்கள் நலன் கருதி, புதியதாக குளோரின் மோட்டார் பம்பு ஒன்று வாங்க ரூ. 85000/–க்கு கூட்டப்பொருள் வைக்க தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுக்கு .

அலுவலகக் குறிப்பு

ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடரலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண். 1783 /2021/இ2)

13. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய உட்புற கடை எண் –6A ஐ குத்தகை உரிமத்திற்கு எடுத்து நடத்தி வந்த திரு.ஆர். ஆறுமுகம் என்பவர் நடத்தி வந்தார். அன்னார் 20.10.2020ல் இறந்து விட்ட காரணத்தால் அவருடைய கணவர் பெயரிலிருந்து தனது பெயருக்கு மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். மேலும் இத்துடன் அன்னாரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் இத்துடன் இணைத்துள்ளார். மேலும் அன்னாரின் வாரிசுதாரர் திருமதி. A. சுபாஷினி என்பவர் கடையின் பெயர் மாற்றம் தொடர்பாக அரசாணை எண் (நிலை) 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை, நாள்.03.07.2007ல் தெரிவித்துள்ளபடி கீழ்க்கண்டவாறு பெயர் மாற்றுக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை செலுத்தியுள்ளார்.

| | நாள் | சலான்எண். | தொகை ரூ |
|---|---|---|---|
| பெயர் மாற்று கட்டணம் | 17.03.2021 | 000 6605 | 1000/– |
| வைப்புத் தொகை | 31.12.2020 | 0004089 | 60000 (12 மாத வாடகைத் தொகை) |

அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை, நாள்.03.07.2007ல் பத்தி எண்.4 வரிசை எண்.ஏல் அனுமதியற்ற அனுபோக உரிமத்தினை ஒரு முறை மட்டும் பெயர் மாற்றம் செய்து வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அரசாணையில் கண்டுள்ளபடியும், விண்ணப்பதாரர் கேட்டுக் கொண்டுள்ளபடியும் **பழைய பேருந்து நிலைய உட்புற கடை எண் –6A ஐ** குத்தகை உரிமையை குத்தகைதாரர் **திரு.ஆர். ஆறுமுகம்** என்பவர் பெயரிலிருந்து திருமதி.A.சுபாஷினி பெயருக்கு பெயர்மாற்றம்செய்ய தனி அலுவலரின்ஒப்புதலுக்குவைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை, நாள்.03.07.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு குத்தகைதாரர்திரு.ஆர்.ஆறுமுகம் இறந்து விட்டகாரணத்தால் அன்னாரின் வாரிசுதாரர் கேட்டுக்கொண்டுள்ளபடியும் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய உட்புற கடை எண் –6A ஐ திரு.ஆர்.ஆறுமுகம் என்பவர் பெயரிலிருந்து திருமதி. A.சுபாஷினி பெயருக்கு பெயர்மாற்றம்செய்ய அனுமதிக்கலாம் (ந.க.எண். 878 /2021/அ4)

14. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் வாகனம் எண்.TN.30.Q.3724 திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தி வருகின்ற வாகனத்தின் தகுதி சான்று முடிவடையும் தருவாயில் இருப்பதால் தகுதி சான்று புதுப்பிக்கு பொருட்டு மராமத்து பணிகள் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் ஒப்பந்தப்புள்ளி பெறவும், பழுதுகள் சரி செய்யவும் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1.பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் ஒப்பந்தப்புள்ளி பெற்று வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2.வாகனம் பழுது செலவினத் தொகையை திடக்கழிவு மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.1123/2020/எச்1)

15. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஆட்டோ வாகன எண்–TN-77 K-6630–ன் பழுதுகள் சரிபார்க்க ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் பெறப்பட விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி பெறப்பட்ட SK Motors நிறுவனத்திற்கு ஆகும் செலவினத்திற்கும், பணி உத்தரவு வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி விபரம்

1.SK Motors –ரூ.13000/–

2.Vellavan Auto, Diesel Labour workers–ரூ.13900/–

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள SK Motors நிறுவனத்திற்கு சப்ளை உத்தரவு வழங்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தொகையை திடக்கழிவு மேலாண்மை நிதி அல்லது பொதுநிதியிலிருந்து மேற் கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்ம்.(ந.க.எண்.3088/2020/எச்1)

16. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் அதிகமாக வந்து செல்லும் பகுதிகளான நகரின் முக்கிய ஒன்பது இடங்களில் கொரோனா நோய் தொற்றை தடுக்கும் பொருட்டு பொதுமக்கள் பாதுகாப்பு கருதி கைகளை கழுவும் பொருட்டு Wash basin அமைக்கவும் மற்றும் குடிநீர் பணியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் ஆகிய பணிகளை பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பணி செய்தமைக்கு ஆனசெலவினம் ரூ.60,000/–க்கு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதி 1920–ன்படி பிரிவு 15–ன் கீழ் மேற்படி பணிகளை செய்தற்கு தனிஅலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர் பதிவு செய்யலாம்.

2. செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொண்டைக்கு தனி அலுவலர் அனும்தி வழங்கலாம் (ந.க.எண்.1135/2020/இ1)

17. ஆத்தூர் நகராட்சி வார்டு எண் 3ல் சிலோன்காலனி பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் புதியதாக அம்மா கிளினிக் செயல் பட உள்ளதால் மேற்படி கட்டிடத்தில் புதியதாக மின் இணைப்பு வசதி, கழிப்பிட வசதி, புதியதாக ஆழ்துளை கிணறு மற்றும் வர்ணம் பூசுதல் ஆகிய பணிகளை செய்ய வேண்டியுள்ளதால் அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தனிஅலுவலர் தீர்மானம் எண்27,நாள்27.01.2021ல் ஒப்புதல் வழங்கியதன் பேரில், மேற்படி பணிக்கு 17.02.2021ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய தனிஅலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எ.லோகநாதன், ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 0.12%மதிப்பீட்டுவிலையைவிட குறைவு |
| 2 | திரு.ஆர்.செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 1.50%மதிப்பீட்டுவிலையைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எ.லோகநாதன், ஆத்தூர் என்பவரின் 0.12% மதிப்பீட்டு விலையைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய தனிஅலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.12% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், திரு. எ.லோகநாதன், ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை தனிஅலுவலர் ஏற்கலாம். பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கவும், தனி அலுவலர் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.387/2021/இ1)

18. ஆத்தூர் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாகம் ஆணையர் சென்னை அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண்20452/2020/LA3, நாள்31.03.201ன் வாயிலாக 15வது நிதி குழு மான்யம் Tied Grantன் கீழ் இரண்டாவது தவணைத்தொகையாக ரூ.90,56,442/–ஐ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி நிதியின் கீழ் ஆத்தூர் நகராட்சி பகுதிகளில் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதை தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விபரம் | மதீப்பீடுத் தொகை இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | இலகுரக வாகனம் (BOV) (பேட்டரியால் இயங்கும் வாகனம்) 15 எண்ணிக்கை கொள்முதல் செய்தல் பணி | 33.00 |
| 2 | முட்டல் தலைமை நிறேற்று நிலையம் அருகிலிருந்து பழுதடைந்த பம்பிங் மெயின் பைப் லைன் மாற்றி அமைத்தல் பணி | 24.50 |
| 3 | குப்பைகளை பிரித்தெடுக்கும் சேகரிப்பு மையம் அமைத்தல் (RRC) | 24.10 |
| 4 | Shreeding Machine கொள்முதல் செய்து நிறுவுதல் 1 எண்ணிக்கை | 8.00 |
| 5 | Incinerater 2 எண்ணிக்கை நிறுவுதல் பணி | 1.00 |
| | மொத்தம் ரூ. | 90.60 |

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர் மேற்படி கடிதத்தினை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2. மேற்படி பணிக்கு நிதிஒதுக்கீடு செய்தது போக மீதமுள்ள தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

3. இப்பணிகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும், செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3356/2020/இ1)

19. ஆத்தூர் நகராட்சியில் DAY-NULM SCHEME–Special Shelter ஆத்தூர் அரசு மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெறும் உள் நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் அறை கட்டுதல் பணிக்கு தலா இரண்டு சிப்பங்களுக்கும் வரைபடங்கள் மற்றும் திட்ட மதீப்பீடுகள் ஆகியன தயார் செய்தல், TURIP 2020–2021 மற்றும் சிறப்பு சாலை திட்டம் 2020–2021க்கு தலா இரண்டு சிப்பங்களுக்கும் உரிய கலர் புகைப்படங்கள் மதிப்பீடுகள் ஒவ்வொன்றுக்கும் மூன்று புக்லெட் வீதம் தலா மூன்று திட்டப்பணிகளுக்கு Site Plan Cad Drawing,.Data மற்றும் Bid Document ஆகியன மூன்று பிரதிகள் வீதம் 15 புத்தகங்களில் விரிவான திட்ட கருத்துருக்கள் தயார் செய்யவும் பணியின் அவசர அவசியம் கருதி திரு.பழனிமுருகன் பொதுசேவை மையம் கே.வி.எஸ் கம்பளக்ஸ் கடைவீதி ஆத்தூர், என்ற தனியார் நிறுவனத்தார் வாயிலாக தயார் செய்து வழங்கியதை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் ஆகியோர்களுக்கு அனுப்பியதற்குரிய செலவினம் ரூ.49950/– மேற்படியாருக்கு வழங்க தனிஅலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர் அனுமதிக்கலாம்,மேற்படி பணிக்கு செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி 15 புத்தகங்களில் விரிவான திட்ட கருத்துருக்கள் தயார் செய்து வழங்கியுள்ள திரு.பழனிமுருகன் பொதுசேவை மையம் கே.வி.எஸ் கம்பளக்ஸ் கடைவீதி ஆத்தூர், என்ற நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை வழங்கவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1801/2020/இ1)

20. நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 2020–21 ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள் மற்றும் ரசீதுகள் டோனர்,பேப்பர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து வாங்கி பயன்படுத்தாம், அதற்கான தொகை செலவு ரூ.6.00 இலட்சத்திற்கு தனிஅலுவலரின்ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

தனிஅலுவலர் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1218/2020/பி1)

21. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படியும், சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர்அவர்களின் ஆய்வு கூட்டஅறிவுரையின்படியும், கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிக்காக 100 வீடுகளுக்கு ஒரு நபர் வீதம் வீடுவீடாக காய்ச்சல் கணக் கெடுக்கும் பணிக்கு களப்பணியாளர்களை பணியமர்த்த உத்தரவிட்டுள்ளார்கள். ஆத்தூர் நகராட்சியில் 15,446 வீடுகள் உள்ளது. 100 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர்கள் வீதம் 15,446 வீடுகளுக்கு 155 நபர் காய்ச்சல் கணக்கெடுப்பு பணிக்கு நியமனம் செய்ய தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது. இப்பணியை மகளிர் சுயஉதவி குழுக்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தொகை ரூ. 15.00 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளதனி அலுவலர் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு :

கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை அனுமதிக்கலாம்.

30/6/2021

தனிஅலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.